பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 05 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதில் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா – ஜெர்மனி இடையேயான நல்லுறவு மேலும் வலுப்பெறும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் வடகிழக்கு மாநிலங்கள் தவிர்க்க முடியாத பகுதியாக உள்ளது என்று மத்திய திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

4. அரபிக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் கொங்கன் கடற்கரை தென்பகுதியில் நேற்றிரவு கரையைக் கடந்ததாக வானிலை ஆயவு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

*<<<<>>>>*

விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதில் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், வேளாண்துறையை நவீனப்படுத்துவது குறித்தும், கடினமாக உழைக்கும் விவசாயிகளின் வளமான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கான வழிவகைகள் குறித்து நிதி ஆயோக் ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

வேளாண்துறையை மேம்படுத்த ஏதுவாக அறிவியல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

மண் வளத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடு தழுவிய வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் வரும் 29ஆம் தேதி ஒடிசா மாநிலம் பூரியில் தொடங்க உள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வேளாண் விஞ்ஞானிகளின் மாநாட்டில் உரையாற்றிய அவர், நாடு முழுவதிலும் 700 மாவட்டங்களில் இந்தப் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும், இதில் இடம்பெற்றுள்ள விஞ்ஞானிகள் குழு கிராமம் தோறும் பயணம் மேற்கொண்டு விவசாயிகளுடன் நேரடி கலந்துரையாடலில் ஈடுபட உள்ளதாகவும் தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் அடைந்தபிறகு முதல் முறையாக விவசாயிகளுடன் நேரடியாக தொடர்புகொள்ளும் வகையில் மத்திய அரசு இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்தப் பிரச்சாரத்தில் நாடு முழுவதிலும் உள்ள ஒன்றரை கோடி விவசாயிகள் பங்கேற்க உள்ளதாக திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறினார்.

<<<<>>>>

இந்தியா – ஜெர்மனி இடையேயான நல்லுறவு மேலும் வலுப்பெறும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக ஜெர்மனி சென்றுள்ள அவர், இரு நாடுகளும் பாதுகாப்பு, டிஜிட்டல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, பசுமை எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக அந்நாட்டு அதிபர் திரு. **Friedrich Merz** உடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று அவர் கூறினார்.

ஜெர்மனியில் புதிய அரசு அமைந்துள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாழ்த்துகளை அவரிடம் பகிர்ந்துகொண்டார்.

தீவிரவாதத்திற்கு எதிராக இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்ததற்காக அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பு நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியா – ஜெர்மனி இடையேயான தூதரக ரீதியிலான உறவுகள் ஏற்பட்டு 25 ஆண்டுகள் நிறைவை கொண்டாடும் தருணம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு. ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் வடகிழக்கு மாநிலங்கள் தவிர்க்க முடியாத பகுதியாக உள்ளது என்று மத்திய திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வடகிழக்குப் பகுதிகளுக்கான முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மிசோரம் மாநிலம் 100 சதவீத கல்வியறிவு பெற்ற மாநிலமாக உருவெடுத்து சாதனை படைத்துள்ளதாகக் கூறினார்.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு இளைஞர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களின் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டில் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் நீதித்துறையில் புதிய சகாப்தம் படைக்கப்பட்டுள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு. பண்டி சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் உள்ள மத்திய தடய அறிவியல் ஆய்வகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நிறைவுரையாற்றிய அவர், தற்போதைய சூழலுக்கு ஏற்ப தடய அறிவியல்துறை மேம்பட்டு வருவதாக கூறினார்.

குற்றவியல் வழக்கு விசாரணைகளை விரைவுபடுத்துவது, வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வது ஆகியவற்றுக்கு தடய அறிவியல் துறையின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர் கூறினார்.

மாவட்டம்தோறும் நவீன தடய அறிவியல் ஆய்வகங்களை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கென தேசிய தடய அறிவியல் உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் 2 ஆயித்து 254 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் தடய அறிவியல் ஆய்வக வசதிகளை மேம்படுத்தவும், துறைசார்ந்த அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கவும் ஆராய்ச்சிப் பணிகளை விரிவுபடுத்தவும் தடய அறிவியல் துறையில் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தின்கீழ் சுயசார்பு நிலையை எட்டுவதற்கான நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படும் என்று திரு. பண்டி சஞ்சய் குமார் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்ததும், அதன் தமிழாக்கத்தை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த கலாச்சாரத்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு வரும் 26ஆம் தேதி பிரேசிலில் நடைபெற உள்ளது.

இம்மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய கலாச்சாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டில் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளிடையே கலாச்சார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தேர்தல் ஆணையத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞர்களின் தேசிய மாநாட்டை தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ஞானேஷ்குமார் தலைமையில் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்றங்களின் மூத்த வழக்கறிஞர்கள், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் அதிகரித்து வரும் சவால்களை திறம்பட எதிர்கொள்வது குறித்தும் தேர்தல் ஆணையத்தின் கட்டமைப்பை வலுப்படுத்துவது மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும் இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

நீதித்துறை நடவடிக்கைகள், சட்ட சீர்திருத்த நடவடிக்கைகள், குறிப்பாக தேர்தல் ஆணைய சட்டக் குழுவின் தயார்நிலை, செயல்திறன் மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்துவது தொடர்பான ஆலோசனைகளும் நடைபெற்றது.

<<<<>>>>

அரபிக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் கொங்கன் கடற்கரை தென்பகுதியில் நேற்றிரவு கரையைக் கடந்ததாக வானிலை ஆயவு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய மகாராஷ்டிர பகுதியில் ரத்னகிரி அருகே நேற்றிவு 11.30 மணியளவில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே கரையைக் கடந்ததாக தெரிவித்துள்ளது.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணி நேரத்தில் படிப்படியாக வலுவிழக்கும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன்படி 2024-25ஆம் ஆண்டுக்கான வட்டி விகிதம் 8 புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாகவே தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 7 கோடி பேர் பயனடைவார்கள் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலம் ஜால்னா மாவட்டத்தில் **Sukapur phata** பகுதியில் நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

மினி டிராவலர் வாகனம் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

ஜெய்ப்பூரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பஞ்சாப், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 206 ரன் எடுத்தது.

207 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி, 19 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 208 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் சென்னை – குஜராத் அணியையும், கொல்கத்தா – ஹைதராபாத் அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<>>>>**

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா மேலும் ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றது.

ஜெர்மனியின் **Suhl** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 10 மீட்டர் பிரிவில் **Shambhavi Kshirsagar** தங்கப்பதக்கத்தையும், **Ojasri Thakur** வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

**<<<<tHE eND>>>>**